விலைரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 சித்திரை 15 றஜப் 3 இதழ் 74

யாழ்ப்பாணம் புதன்கிழமை 28—4—82

## "தமிழ்மக்களின் உள்ளக்குமுறலை உணர்கின்றோம்"

யாழ். நாரில் இந்து மாநாட்டுப்பேராளர்கள்

(யாழ்ப்பாணம்)

''இந்தியாவிலும், இலங்கையிலும், ஆதியில வாழ்ந்த மக்கள் இந்துக்கள்தான். அவர்கள் தமிழ் மொழியையே பிரதான மொழியாகக்கொண்டிருந்தனர் மொகஞ்சதாரோ பகுதிகளில் வாழ்ந்த மக்களது எழுத்தக்களை ஆராய்ந்த ருசிய நாட்டு ஆய்வாளர்கள் இதனை நிருபித்துள்ளனர். இதன்பின்னரே இவ்விரு நாடுகளிலும் பௌத்த மதம் நிலைபெறத்தொடங்கியது.''

இவ்வாறு உலக இந்து மாநாட்டுக்கு வருகைதந்திருந்த பேராளர்களுக்கு யாழ்ப்பாண மாநகரசபை நேற்றுமாலை அளித்த வரவேற்பில் பேராசிரியர் மு. அருணசலம் தெரிவித்தார்.

இவ்வைபத்திற்கு யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் திரு. இராசா விசுவநாதன தலைமை வகித்தார்.

திரு. அருணசலம் தொடர்ந்து உரையாற்றுகையில், ''இலங்கையில் வாழும் தமிழ் மக்களது உள்ளக் குமுறல்களை நாம் அவதானிக்கின்றோம். தமிழர்கள் எங்குவாழ்ந்தாலும் அவர்கள் எமது மக்கள் என்ற உணர்வோடு வாழ்வோம்'' என்றார்.

'திருக்கோயில்' பத்திரிகை ஆசிரியர் திரு. ஏ. முருகவேள் பேசுகையில் ''யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கும் தலங்களை தரிசிக்க வந்த எமக்கு இந்த மண்ணில் வாழும் மக்களின் பண்பையும் அன்பையும் காணக்கூடிய வாய்ப்பை நீங்களே ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றீர்கள். உண்மையில் இந்த மண்ணில் வாழும் மக்கள், நிறைந்த ஞானம் உள்ளவர்கள்'' என்றார்.

(8ம் பக்கம் பார்க்க)

# "கைதுசெய்யப்பட்டால் என்னை அழித்துவிடுவார்கள் என்பதனல் என்னை அழிக்கநானேசுட்டேன்!

# சாட்சிக்கூண்டில் குட்டிமணி

## சித்திரவதைபற்றியும் தெரிவிக்கப்பட்டது

(கொழும்பு)

**"பொலிஸார் என்னைத் தேடிக்கொண்டிருக்கின்றார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனல் பொலிஸாரிடம் நான் சரணடைவதையோ அல்லது பொலிஸார் என்னைக் கைதுசெய்வதையோ நான் விரும்பவில்லை. கைதுசெய்யப்பட்டால் என்னைச் சித்திரவதைசெய்து அழித்துவிடுவார்கள் என்பதனல்தான், நான் 1981ல் கைதுசெய்யப்பட்டபோது என்னை அழித்துக்கொள்ள தலையில் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டேன்"**

இவ்வாறு, செல்வராசா யோகச்சந்திரன் [குட்டிமணி] நேற்றுக்காலை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் முதல்தடவையாக சாட்சிக்கூண்டில் நின்று சாட்சியமளிக்கையில் கூறினர்.

குட்டிமணி தனது சாட்சியததில் மேலும் தெரிவித்ததாவது:

### 48 நாட்கள் தவிர...

''1981-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் ஐந்தாம் திகதி நான் வல்லிபுர ஆழ்வார் கோவிலுக்கு அருகில் கைது செய்யப்பட்டேன். அந்த நேரம் என்னையே நான் அழித்துக் கொள்ளும் பொருட்டு துப்பாக்கியால் தலையில் சுட்டேன்.

''1973-ம் ஆண்டு முதல் 1977-ம் ஆண்டு வரை நான் பல தடவைகள் கைதானேன். காவலில் வைக்கப்பட்டேன். நான்காவது மாடிக்குக் கொண்டுசெல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டேன்.

''1973 முதல் 1977 வரை நாற்பத்து எட்டு நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்கள் சிறையில்தான் கழித்தேன்.

''1977-ம் ஆண்டு மே மாதம் விடுதலைசெய்யப்பட்டேன்.

### இளைஞர்கள் கொல்லப்படுவதாக...

''நான் விடுதலையான பின்னரும்; பல தமிழ் இளைஞர்கள் ஆயுதப்படையினரால் சித்திரவதை செய்யப்படுவதாகவும், உயிரற்ற பல சடலங்கள் மதகுகளின்கீழ் கிடப்பதாகவும், பல தமிழ்இளைஞர்கள் தொடர்ந்து கொலை செய்யப்படுவதாகவும் நான் அறிந்தேன். என்னையும் பொலிசார் மீண்டும் தேடுவதாக அறிந்தேன். சுவரொட்டிகளிலும் எனது புகைப்படம் இடம்பெற்றிருந்தது. கைதாகி அவர்கள் கையில் சிக்கினல் நான் அழிவேன் என்பது தெரியும். கைதாகி நான் அழிவதை விரும்பவில்லை. அதனல் தான்என்னையே நான் சுட்டுக் கொண்டேன்,

### சித்திரவதை செய்தனர்

''கடைசியில் நான் இராணுவ ஆஸ்பத்திரியில் இருந்தேன். எந்த நேரமும் கட்டிலில் படுக்க வைத்து, கட்டிலை ஆட்டிக் கொண்டிருப்பார்கள்.

''சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் திரு. கனகசிங்கம் என்னிடம் சாட்சியம் பதிவு செய்யப் பல தடவைகள் வந்தார். அவரது கேள்விகளுக்கு நான் பதில் சொல்லத் தவறினல் அல்லது தெரியாது என்று கூறினல், எனது முகம், வயிறு, நெஞ்சில் தாக்குவார். இவருடன் வந்த ஹேமச்சந்திரா, ஆரியபாலா ஆகிய பொலிஸ்அதிகாரிகளும் தாக்குவார்கள். ஹேமச்சந்திரா

(8ம் பக்கம் பார்க்க)

## நள்ளிரவில் துப்பாக்கிச்சூடு; ஒருவர் பலி!

[கரவெட்டி]

மயிலிட்டி வடக்கில் நேற்று முன்தினம் நள்ளிரவு நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியானர்!

மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த முன்னுள் கிராமவிதானை சின்னப்பு கதிரேசு [65 வயது] என்பவரே துப்பாக்கிச் சூட்டினல் மரணமானவராகும்.

நள்ளிரவு நேரத்தில் இவரது பெயரைச் சொல்லி யாரோ அழைத்ததாகவும் இவர் வெளியே சென்றதும் துப்பாக்கிச் சூடு விழுந்ததாகவும் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதி விசாரணைகளை நடத்திவருகின்றார். இது சம்பந்தமாக நேற்று இரவுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

## சீன விமான விபத்து: நூறுபேர் பலி!

பீக்கிங், ஏப். 27

சீனவின் தென்மாகாணத்தில் இன்று நிகழ்ந்த விமான விபத்தில் நூறுபேர் மாண்டனர்!

விபத்துக்குள்ளான விமானம் உள்ளூர்ச் சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது.

விழுந்து நொறுங்கிய இவ் விமானத்தில் மொத்தம் 110 பயணிகள் இருந்தனர்.

## நோயாளி இறந்து 3 நாட்கள்; பிரேதபரிசோதனை இல்லை!

### யாழ். ஆஸ்பத்திரி அவலநிலை

(யாழ்ப்பாணம்)

மூன்று தினங்களுக்கு முன்னர் யாழ். ஆஸ்பத்திரியில் காலமான ஒருவரின் சடலம், உறவினர்களினல் அடையாளம் காணப்பட்டும், சட்ட வைத்திய அதிகாரி இல்லாது, பிரேதபரிசோதனை நடத்தப்படாத ஒரே காரணத்தினல் இன்று நான்காவது நாளாக யாழ்.ஆஸ்பத்திரியின் பிரேத அறையில் தொடர்ந்திருக்கிறது!

சடலத்தை வீட்டுக்குக் கொண்டுசெல்ல உறவினர்கள் கடந்த மூன்று நாட்களாக இரவுபகலாகப் பகீரதப்பிர

(8ம் பக்கம் பார்க்க)

நடுக்கடலில்

## படகு தீப்பிடித்தது! 2 மீனவரை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டியிலிருந்து மீன்பிடிக்கச்சென்றவர்களின் 'பிளாஸ்ரிக்' படகு கடலில் தீப்பிடித்துக் கொண்டதில், இருவர் நிலைமை தெரியவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

பிளாஸ்ரிக் படகில் மூவர் மீன்பிடிக்கச் சென்றனர் என்றும், கடலில் படகு நின்றபோது அதிலிருந்த ஒருவிளக்கு கீழே விழுந்து தீப்பிடித்துக் கொண்டதென்றும் தீ படகில் பரவத்தொடங்கியதும் மூவரும் கடலில் குதித்தனர் என்றும் நித்தியானந்தன் ராஜன் (13 வயது) மட்டும் தெய்வாதீனமாக கரைசேர்ந்தார் என்றும் ஏனைய இரண்டு பேரின் நிலைமைபற்றித் தெரியவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் இம்மாதம் 23ம் திகதி நிகழ்ந்தது.

## மாநாட்டுப்பேராளர்களுக்கு சிறப்பான வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

அகில உலக இந்துமாநாட்டுக்கு வருகைதந்த நாற்பத்தியொரு பேராளர்களுக்கும், யாழ்ப்பாண மாநகரசபை நேற்று சிறப்பான வரவேற்பளித்து கௌரவித்தது.

வைபவத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், யாழ்ப்பாண எம் பி. திரு. வெ. யோகேஸ்வரன், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா, பனம் பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. கே. நடராசா உட்படப் பல மாநகரசபை, அபிவிருத்தி சபை உறுப்பினர்களும் பொது மக்களும் திரளாகக் கலந்து கொண்டனர்.

வரவேற்பு மண்டபத்தைச் சுற்றி பலத்த பொலிஸ் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இவ் வைபவத்தில் பேராளர்களுக்கு இலங்கையில் இந்துமதத்துக்கு ஏற்பட்ட பாதுகாப்புபற்றி நூல் ஒன்றும் விநியோகிக்கப்பட்டது. யாழ். மாநகரசபை பனைஓலையில் அச்சுப்பதிவுசெய்யப்பட்ட சங்கிலியன் படமுஞ் சகலருக்கும் விநியோகித்தது.

[கெ]

### மணிவாக்கு

இலக்கிய மென்பது யாருமே கற்கவிரும்பாதது;
ஆனல் கற்றிருக்க வேண்டியது.

— மார்க் டுவெயின்

# நமது நோக்கு

## தமிழர் விடுதலை- தமிழ்ஈழ விடுதலை

ஒரே நாளில், ஒரே நேரத்தில், ஒரே இடத்தில் இரண்டு மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டகூட்டத்தினர் தமது கூட்டங்களை மிக அமைதியாக நடத்தி முடித்தது – அதுவும் இன்றைய சூழ்நிலையில்– மக்கள் பண்புக்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

முந்தநாள் தந்தை செல்வா நினைவாலயத்தில் நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினரதும், தமிழ் ஈழ விடுதலை அணியினரதும் கூட்டங்களையே நாம் குறிப்பிடுகின்ருேம்.

முப்பது அடி இடைவெளியில் நடந்த இரு கூட்டங்களில் எவ்வித மோதலோ அசம்பாவிதமோ நடைபெற்றதாகக் கூறப்படவில்லை; அதற்கு மாருக பூரணஅமைதி நிலவியதால் ஒருகூட்டத்தில் சமூகமளித்தோர் மற்றைய கூட்டத்தில் நிகழ்த்தப்பட்ட உரைகளைக் கவனமாகக் கேட்க முடிந்தது. அதுமட்டுமல்ல; கருத்தரங்கு போன்று பிரச்னைகள் எழுந்த போதெல்லாம் பதில் சொல்லும் வாய்ப்பும இரு பகுதியினருக்கும் கிடைத்தது வியப்புக்குரியது; வேடிக்கை பார்க்க வந்தோருக்கு வெறும் ஏமாற்றமானதுங்கூட.

இது போன்ற சங்கட நிலைகள் உண்மையில் நற்பலனளித்து வந்ததை நாம் இடநெருக்கடி நிறைந்த பாடசாலைகளில் கண்டதுண்டு. வகுப்பறைகள் அணித்தாயிருக்கும் பாடசாலைகளில் அடைப்பு சரியாகஅமையாவிட்டால் ஒரு விவேகமான மாணவன், இரு பாடங்களை இரு வேறு நிலைகளில், ஒரே நேரத்தில் கிரகிக்கும் வாய்ப்புண்டு' சில வேளைகளில் தன்னுடைய ஆசிரியரின் கற்பித்தலைவிட இன்னெருதிறமை மிகுந்தஆசிரியரின்வேறெரு பாடத்தைச் சுவைத்துப் படிக்கும் வாய்ப்பு அப்போது தான் கிடைக்கும்; மறுபக்க சூழ்நிலை இங்கு பொருத்தமற்றது.

'நடப்பதெல்லாம் நன்மைக்கே' என்றுசொல்வார்கள்; அது ஒரு வெறும்வாய் வேதாந்தமாகப் போவதும் உண்டு; ஆனல் நெருக்கடியெல்லாம் மக்களை விழித்திருந்து சிந்திக்கத்தூண்டுமென்பது உண்மை.

கடந்த சிலகாலமாக இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு இன்னல்களுக்கு மேல் இன்னல்கள் குவிந்து கொண்டே இருக்கின்றன. இதற்கு ஆணித்தரமான சாட்சி, யாழ்ப்பாணத்தில் வடபகுதியில் படிப்படியாக இறுகிவந்த அரசியல் ஒற்றுமை; யாழ்ப்பாணத்தைச் சிறப்பாகக் குறிப்பிட்ட காரணம்; வேறெங்கும் மக்கள் ஒற்றுமைப்பட்டாலும் இங்கு அது கைகூடுவது அற்புதத்தில் அற்புதம்! பலவித அரசியல் கட்சிகளுக்கும் வேறுபட்ட சிந்தனைகளுக்கும் பேர்போன இடம் யாழ்ப்பாணம். தனிமனிதனின் சுயசிந்தனைக்கு யாழ்ப்பாணம் சிறந்தஉதாரணம்.

அண்மைச் சரித்திரத்தில் மக்கள் ஒருங்கு திரண்டுஒரு கட்சியாக தெரிந்தெடுத்து தமது உரிமைகளை வென்றெடுக்கும் பணியில் பிரதிநிதிகள் பாராளுமன்றம் சென்றது சாமான்யமான சாதனையல்ல; பொதுமக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலித்த பெருஞ்செயலெனக் கொள்ளவேண்டும்.

அன்று தொட்டு இன்று வரைக்கும்நிகழ்ந்தவரலாற்றின் குறைநிறைகளை நாம் ஆராய முற்படவில்லை; துன்பம் நிறைந்த அத்தியாயம் அது: இந்த நிலையில் நாம் நிலைமையைச் சமாளித்து முன்னேறுவது எப்படி? கருத்துவேற்றுமைகள் ஏற்படுவது; பிணக்குகள் மலிவது சர்வ சாதாரணம்; ஆனல் இருவேறுபாதைகள் உண்டு என்று தற்போது கட்டுக்கோப்புடன் இருக்கும் ஒரு கட்சி இரண்டாகப் பிரிவதால் நன்மை ஏற்படுமென்று நிச்சயம் சொல்லலாமா? அது தவிர்க்கமுடியாத நிலையா?

தந்தை செல்வாவின் ஆணையைக் கடைப்பிடிப்பதாகக்கூறும் இரு பகுதியினரும் ஒரு பொது வழியில் தொடர்ந்து கொள்ளும் விவேகத்தை உணர்வாரானல் இடர் எதுவுமில்லை; கருத்து வேறுபாடு முற்றிவிட்டால் மக்களின்தீர்ப்பே தீர்ப்பு.

கட்சிகள் பெருகுவதால் பிரச்னைகள் தீர்ந்து விடுவதில்லை. ஆனல் மக்கள் மத்தியில் கருத்து மோதல் உண்டென்பதை தலைவர்கள் உணர்ந்து அதற்கேற்ப நிலைமையில் மாற்றம் ஏற்படுத்துவது அவசியமாகிறது.

எங்கும் எந்த நேரத்திலும் ஏதேச்சாதிகாரம் ஒற்றுமைக்கு சாதகமாகாது.

## பருப்போல வந்த வினை

நூற்று நாற்பத்தொன்பது வருடங்களாக போக்லண்ட் தீவுகளை தன்னுதிக்கத்துக்குள் வைததிருந்த பிரிட்டனுக்கு 150வது ஆண்டு நிறைவு வைபவம் அங்கு கொண்டாட வசதி வராதென்று ஆர்ஜென்டீனு ஏற்கனவே கூறியிருந்தது.

இன்று போக்லண்ட்தீவுகளிலுள்ள தென் ஜோர்ஜியாவை சண்டையில் மீண்டும் பிரிட்டன் கைப்பற்றி விட்டது எதனைக் குறிக்கிறது? முழு வெற்றியின் முதற்சின்னத்தையா? அல்லது சமுத்திரத்தின் பனிப்பாறையின் நுனியை கப்பல் முட்டடதையா?

நவீன கடற்படை பலம் வாய்ந்த பிரிட்டன் ஆர்ஜென்டீனவை சில நாட்களில் தோற்கடித்து மீண்டும் வெற்றிக்கொடியை நாட்டலாமென்று நினைப்பது தவறென மூன்ரும் உலக நாடுகள் நம்புகின்றன. விருப்பத்தில் பிறந்த நம்பிகையல்ல இது.

ராணுவப்பலம் மட்டும் போரின் வெற்றிக்கு உறுதியளிக்கவல்லதல்ல. தென் அட்லான்ரிக் சமுத்திரம் பிரிட்டனுக்கு ஒரு புதுப் பாடம். அங்கு அடிக்கடி நிகழும் சூருவளியும் சுவாத்திய மாற்றங்களும் பிரிட்டிஷ் கடற்படைக்கு தடையாகும். ஆர்ஜென்டீனுவுக்கு ஆதரவாகவும் அமையும். பல்லாயிரம் மைலுக்கப்பாலிருந்து வரும் சண்டைக்காரர் தன் சொந்த ஊரிலுள்ள ஒருவனை அடித்து விழுத்தி வெற்றிபெற்றது அந்தக் காலம்.

இன்று ஆர்ஜென்டீனுவுக்கு ஆபத்தென்ருல் பேரு போன்ற பலலத்தீன் அமெரிக்க நாடுகள் உதவிக்கு ஓடிவருவது சாத்தியம்; போர் நீடிக்காமல் சடுதியில் வெற்றியில் முடிவடைந்தாலும் அந்த நாட்டைப் பாது காக்க ஒரு கடற்படை பிரத்தியேகமாகத் தேவைப்படும்.

பிரிட்டனுக்கு உள் வீட்டில் செலவு அதிகமாக இருக்கும் வேளையில் வெறும் வறட்டுக் கௌரவத்துக்காக இந்த அபாயத்தில் ஈடுபடுவது உசிதமா?

பிரதமர் மாற்றத்துடன் போரையும் கைவிட்டால் பருப்போல வந்த வினை பாரவினையாகாது.

# கடவுள்சுவாமிகள் ஜயந்தி தினம்

பாரதநாட்டிலே எப்படி ஆத்மீக ஞானிகள் தோன்றி அருளொளி பரப்பினுர்களோ அதே போன்று சிவபூமியாகிய எம் இலங்கா புரியிலும் குறிப்பாக யாழ்ப்பாண நந்நகரிலே வாழையடி வாழையென வந்ததிருக் கூட்டமன்ரு என்ற அருள் வாக்குக் கிணங்க பல ஞானிகள் தோன்றி அருள் மழை பொழிந்து ஆன்மிக நெறிப்படுத்தி வந்தனர். வருகின்றனர்.

இவ்வான்மிக நெறியை முதல் முதலில் நம் நாட்டில் விதைத்தவர் கடையிர்சுவாமிகளாவர். இப்புனிதருடைய வருகையினுலேயே எம் நாடு அதிதிருவருட்சிறப்புப் பெற்று விளங்குகிறது. இவரின் பிரதம சிஷ்யனுகச் செல்லப்பாச் சுவாமிகள் திகழ்ந்தார்கள் இம்மெய்ஞ்ஞானிக்கு மறவன்

**வ. குமாரசாமி**

புலோ குழந்தை வேற்சுவாமிகள் போன்ற தவஞானிகள் பலர் சிஷ்யர்களாகத் தோன்றினுர்கள், குழந்தைவேற்சுவாமிகளின் சிஷ்யனுக விளங்கிய பெரிய குருநாதரென போற்றப்பட்ட மறவன்புலோசின்னத்தம்பிக் குருசுவாமிகளாவர் இவரின் தொண்ணூற்ருது சிஷ்யர்களுள் பிரதம சிஷ்யனுக, விளங்கியவரே மௌன குரு கடவுள் சுவாமிகளாவர் இவரிளி இயற்பெயர் சிவஸ்ரீ முருகுட்பிள்ளைச் சுவாமிகள் என்பதாகும்.

அல்வாயைத் தமது பிறப்பிடமாகக் கொண்ட சுவாமிகள் உலகமெலாம் தமது பிறப்பிடமெனக் கொண்டார்கள். உலகிலுள்ள ஜீவர்களெல்லாம் கடவுளின் இருப்பிடமென உணர்ந்தார்கள். எல்லோரையும் கடவுள் கடவுள் என அழைத்தார்கள். எவன் ஒருவன் எதைச் சதா நினைக்கின்ருனே அவன் அதுவாகி விடுகின்ருன். சுவாமிகளும் சதா கடவுள் எண்ணமாக இருந்தார்கள். எங்கும் கடவுளைக் கண்டார்கள். தாமும் கடவுளானுர்கள், மக்களெல்லோரும் அவர் வாழ்ந்த காலத்திலேயே அவரைக் கடவுள் சுவாமிகளென அழைத்து அவர் பாதார விந்தங்களைத் தொழுது வந்தனர். உடலை நீக்குவதற்கு முன்பே உடலுடன் உயிர்இருக்கும் பொழுதே கடவுளானுர்கள் இப்பேறு எஞ்ஞானிக்கும் கிடையாத பெரும் பேருகும்.

சுவாமிகள் தாம் எடுத்த பிறவியின் பயன் இனிது அனுபவிக்கத்துணிந்தும் குரு சிஷ்ய பரம்பரையை உருவாக்கும் பொருட்டும் ஆன்மீக தாகங்கொண்ட அடியார்களுக்குக் கருணை முகிலாகத் திகழவும் தமது நிரந்தரமான இருப்பிடத்தை முத்திஸ்தலமாகிய செல்வச்சந்நிதியிலே அமைத்துக் கொண்டார்கள்.

முருகனை வணங்கவரும் அடியார்களெல்லாம் அம்முருகன் பிள்ளையிடம் சென்று தம் மனக்குறை நீங்கப்பெற்று ஆறுதலடைந்தனர் அருட் பார்வையினுலே அனைவரின் கிலேசங்களையும் போக்கி அமைதியுறச் செய்தார்கள், அவரவர் பக்குவநிலைக்கேற்ப அருளுரை வழங்கினுர்கள். வேண்டுவார் வேணடுவதை ஈயும் பிராணுகத் திகழ்ந்தார்கள்.

தியானம், மௌனம் என்பவற்றின் அதியற்புத சக்திகளை அடியவர்களுக்கு மிக இலகுவாக எடுத்தியம்பினுர்கள். எங்கள் குருநாதர்ன் பெருமை சொல்லுக்கடங்காது. சுவாமிகள் அருட்குரு நாதராகவும் ஆன்மீக அருள் விளக்காகவும் திகழ்ந்தார்கள் திகழ்கின்ருர்கள் திகழ்ந்து கொண்டே இருப்பார்கள்.

சுவாமிகளின்ஜெயந்திதினம் 28–ம் திகதி புதன்கிழமை செல்வச்சந்நிதியில் அவரின் சிஷ்யர்களினுலும் மெய்யன்பர்களாலும் சிறப்பாககொண்டாடப்படுகின்றது.

## பிரயாணிகள் ஏமாற்றம்!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் நேற்று முன்தினம் சீசன் டிக்கட் வழங்கப்படாததினுல் ஏராளமான பிரயாணிகள் ஏமாற்றத்துடன் திருப்பிச் சென்றனர்.

ஏப்ரல் 26ம் தேதி சீசன் டிக்கட் பெறுவதற்காக காலையிலிருந்தே பலர் யாழ். பஸ் நிலையத்தில் வரிசையாக நின்றனர். சீசன் டிக்கட் வழங்கப்படாதென அதிகாரி ஒருவர் தெரிவித்ததை தொடர்ந்து அங்கு நின்றவர்கள் ஏமாற்றத்துடன் சென்றனர். பின் 27ம் தேதியே சீசன் டிக்கட் வழங்கப்பட்டது. [க]

# மக்கள் கருத்து

## ஒற்றைவழிப் பாதை

இன்று, யாழ் நகரிலிருக்கும் ஒற்றைவழிப் பாதைகளில், இருபக்கங்களிலிருந்தும் 'சைக்கிள்'கள் ஓடுவதை பார்க்கிருேம்.

குறிப்பாக கஸ்தூரியார்வீதி, கே கே.எஸ். வீதிகளில் வாகனங்கள் செல்லவே நெருக்கடியாக இருக்கும் போது இரு பக்கங்களிலிருந்தும் சைக்கிள்கள் ஓடுவதனுல் மக்கள் நடந்து செல்ல முடியாதுள்ளது

சமீபகாலத்தில் யாழ். பகுதியில் நடைபெற்ற கடை எரிப்பு போன்றசம்பவங்களுக்குப் பின்னர் வீதி ஒழுங்குகளை கவனிக்க 'பொலிஸார்' கடமை புரியாதமை, சைக்கிள் ஓட்டிகள் சட்டத்தை மீறுவதற்கு வாய்ப்பாகவும், விபத்துக்கள் ஏற்படுவதற்கு ஏதுவாகவும் உள்ளது.

இன்றுள்ள, சீரான சூழ்நிலையில் மாநகரமன்ற முதல்வர் பொலிஸ் பகுதியின் உதவியை நாடி இந்த ஒற்றைவழிப் பாதைகளில் ஒழுங்கு நிலவ ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

— கண்ணன்.

## இங்கு இருள் அகலவேண்டும்

சாவகச்சேரித் தொகுதியில் பல பாகங்களுக்கும், பல கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் வழங்கப்பட்ட பகுதிகளிலும் பார்க்க எந்த வகையிலும் தரம் குறைவாகக் காணப்படாத தச்சந்தோப்பு கிராம சபைப்பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படாதது மிகவும் வேதனைக்குரியதாகும்.

மின்சாரம் வழங்கப்படாததினுல் பல தொழிலாளர்கள் மனித சக்தியின் முக்கியத்துவத்தை யுணர்ந்து டீசல், மண்ணெண்ணெய் போன்ற எரிபொருட்களில் இயங்கும் பல சிறிய இயந்திரசாதனங்களைப் பொருத்தி சிறிய தொழிற்சாலைகளை இயக்கி வருகின்ருர்கள். இதனுல் அவர்கள் உழைக்கும் பணத்தில் பெரும் பகுதிப்பணம் எரிபொருளுக்காக செலவுசெய்யப்படுகிறது. அதே நேரத்தில் நாளாந்த வாழ்க்கை நடாத்தும் பல தொழிலாளர்களும் தமது ஊதியத்தில் ஒருபகுதியை நாளாந் தம்எரிபொருளுக்காகச் செலவு செய்கிருர்கள். இப்பகுதி மக்களின் மனிதசக்தி பயன்படவும், தச்சன்தோப்பு இருளகன்று ஒளிவீசவும் சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் அவர்களும் சம்பந்தப்பட்ட அமைச்சும், திணைக்களமும் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுப்பார்களா என இப்பகுதி மக்கஅ ஆவலுடன் எதிர்பார்க்கிருர்கள்.

க. சந்திரசேகரம்.
செயலாளர்
தச்சன்தோப்பு கிராம,
அபிவிருத்திச்சங்கம்.

## ஆங்கிலக் கல்வி

5–4–82 திகதிய 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த ஆசிரியர் குரலைப் பெரிதும் மெச்சுகின்ருேம். இது சிந்தனைக்குரியஉணவாகும். ஓர்உண்மை இதனை நாம் உணரவேண்டும். ஆங்கிலம் அவசியம் தான். ஆனல் அது இன்றி ஒன்றும் ஆகாது என்றில்லை. அறிவு வளர்ச்சிக்கு ஆங்கில அறிவும் உதவி புரியும்; இதில் ஆட்சேபனை இல்லை. ஆங்கிலம் என்ற போர்வையில் இன்னும் இன்னும் சமூக ஏற்றத்தாழ்வுகளின் இடைவெளிகளை அகட்டப்படாது எங்கும் சமநிலை

(4–ம் கலம் பார்க்க)

(5 ம் கலத்தொடர்ச்சி)

வேண்டும். ஆங்கிலம் போதிக்கத்தகுதியான குருவானவர்கள் தட்டுப்பாடின்றி குறைவின்றிக் கிடைக்க வேண்டும். ஆங்கில ஆட்சியினுல் ஏற்பட்ட தீயவிளைவுகள் பலவுக்கும் மூல காரணம் ஆங்கிலக்கல்வியாகும். வசதிப்படைத்தோர், சமயம் மாறியோர், சந்தர்ப்பம் பெற்ருேர் ஆங்கிலக் கல்வி பெற்றனர். இது தொழில் வாய்ப்பு, அஸ்தஸ்து, சமூகத்தில் பெரிய இடம் என்ற முனைப்பு ஆகியவற்றுக்கும், செல்வம் ஒரு சிலரிடம் செறியவும் வழிவிட்டது. ஆங்கிலத்தில் பேசினுல் தான் ''நாகரிகம்'' என்ற போலிநிலையை ஏற்படுத்தியது. உங்கள்கருத்து சிந்திப்போருக்கு உவகை அளிக்கும்; உறைப்புடன் கொடுத்துள்ளீர்கள்.

வாசகன்.
அல்வாய்.

தென் ஜோர்ஜியாவில்

# பிரிட்டன் ஆக்கிரமிப்பு: ஐ. நா. வில் ஆர்ஜென்டீனு முறையீடு

புவனர்ஸ்அயர்ஸ். ஏப். 27
போக்லண்ட் தீவுகளிலுள்ள தென் ஜோர்ஜீயாவில் பிரிட்டன் ஆர்ஜென்டீனு ஐ. நா. சபையில் முறையிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இது குறித்து ஐ. நா. பாதுகாப்புச் சபையைக் கூட்டுமாறு ஆர்ஜென்டீனு இதுவரை கேட்கவில்லையென்றும் கூறப்பட்டது.

கடந்த சனிக்கிழமை போக்லண்ட் தீவுகள் நெருக்கடி குறித்து ஐ. நா. சபையில் ஆர்ஜென்டீனுத் தூதுவர் கண்டித்தார்.

போக்லண்ட்தீவுகள் குறித்த ஆர்ஜென்டீனுவின் கோரிக்கைக்கு 37 நாடுகளைக் கொண்ட அணிசேரா இயக்கம் ஆதரவு தெரிவித்துள்ளது.

இப்பிரச்னை சமாதானமாகத் தீர்த்து வைக்கப்படவேண்டும் என்றும் அவை கேட்டுள்ளன.

தென் ஜோர்ஜீயா விவகாரத்தில் அமெரிக்க நாடுகள் சம்பந்தப்படுவது நல்லதல்லவென்று அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. அலெக்சாண்டர் ஹெய்க் தெரிவித்துள்ளார்.

போக்லண்ட் தீவுகளிலிருந்து பிரிட்டிஷ் கடற்படை வாபஸ் பெறப்பட்ட பின்னரே, அந்நாட்டுடன் ஆர்ஜென்டீனு சமரசப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுமென்று வெளிநாட்டு அமைச்சர் திரு. மெண்டிஸ் கூறியுள்ளார்.

பிரிட்டன் யுத்தக் கப்பல்களுடன், அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களையும் பயன்படுத்தித் தென் ஜோர்ஜீயா மீது தாக்குதல்களை மேற்கொண்டதாக ஆர்ஜென்டீனு தெரிவித்துள்ளது.

ஆர்ஜென்டீனுவின் 180 துருப்புக்களைப் பிரிட்டன் கைதிகளாக்கியுள்ளதாகவும் கூறப்பட்டது.

தென் ஜோர்ஜியாவிலுள்ள லெய்ட் துறைமுகத்தை பிரிட்டன் கைப்பற்றியுள்ளதாக ஆர்ஜென்டீனுவின் ஐ. நா. தூதுவர் தெரிவித்துள்ளார். (வெ)

## "பாலஸ்தீன மக்களின் ஜீவாதார உரிமைகள் விலைமதிப்பற்றவை"

நியூயோர்க், ஏப். 27
"எந்த நாடு இஸ்ரேலிய அடக்குமுறைக்கும், பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் ஆதரவு அளிக்கிறதென்பதை பாலஸ்தீனிய மக்கள் தமது சொந்த வேதனை மிகுந்த அனுபவங்களின் மூலம் நன்கு அறிவார்கள்."

இவ்வாறு ஐ. நா.விலுள்ள 'பி. எல். ஓ.'வின் நிரந்தர அவதானியான திரு. லாபிப் டெர்ஸி கூறினர்.

இந்த ஆதரவுக்குப் பின்னுல் உள்ள அமெரிக்காவின் நோக்கம் என்னவென்று தெரியும் என்று கூறிய அவர், "பாலஸ்தீனிய மக்களது அடிப்படை ஜீவாதார உரிமைகள் விலைமதிக்கமுடியாதவை" என்று தெரிவித்தார்

## வேறுபகுதிகளை இஸ்ரேல் கொடுக்காதாம்.

டெல்அவிவ். ஏப், 27
இஸ்ரேல் 1967ம் ஆண்டு கைப்பற்றிய சைனுய் பிரதேசத்தைத்தவிர, இதர அரபு பிரதேசங்களை எகிப்திற்கு விட்டுக்கொடுக்காது என்று இஸ்ரேல் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். (வெ)

இஸ்ரேல், எகிப்திற்கு

# கூடுதலான ஆயுதங்களை அமெரிக்கா விநியோகிக்கும்!

வாஷிங்டன் ஏப், 27.
இஸ்ரேலுக்கும். எகிப்திற்கும் கூடுதலான ஆயுதங்களை அமெரிக்கா விநியோகம் செய்யவுள்ளதாக அந்நாட்டின் பாதுகாப்புத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கு 51 கோடி டாலர் பெறுமதியான யுத்த விமானங்களையும், எகிப்திற்கு 3 கோடி டாலர் பெறுமதியான ஏவுகணைகளையும் அமெரிக்கா விநியோகம் செய்யவுள்ளதாகக் கூறப்பட்டது.

1967ம் ஆண்டு சைனுய் பிரதேசத்தை இஸ்ரேல் கைப்பற்றி அதனை சில தினங்களுக்கு முன்னர் எகிப்திடம் கையளித்ததைத் தொடர்ந்து அமெரிக்கா இவ்விருநாடுகளுக்கும் ஆயுதங்களை விநியோகிக்கவுள்ளதாகக் கூறப்பட்டது.

அமெரிக்காவின் இவ் ஆயுத விநியோகம் தொடர்பாக விவாதிக்க அமெரிக்க காங்கிரஸிற்கு 30 தினங்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. வெ]

## நாராயணசாமிநாயுடு விடுதலை

சென்னை ஏப். 27
தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தலைவர் திரு. நாராயணசாமிநாயுடு விடுதலை செய்யப்பட்டார்.

விவசாயிகளது கூட்டுறவுக் கடன் சம்பந்தமாக விவசாயிகள் கிளர்ச்சின் போது திரு. நாராயணசாமி நாயுடு கைது செய்யப்பட்டு 15 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

திரு. நாராயணசாமி நாயுடுவுக்கு கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட திடீர் சுகவீன காரணமாக சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். (கு-வெ)

## பாராளுமன்ற ஸ்தானம் இழந்தனர்

லண்டன், ஏப். 27
மோல்டா நாட்டின் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வந்த உறுப்பினர்கள், தங்களது ஸ்தானத்தை இழந்தவர்களாகக் கருதப்படுவார்கள் என்று அந்நாட்டின் பாராளுமன்றச் சபாநாயகர் அறிவித்துள்ளார். (வெ)

## விஷவாயுக் கிணற்றில் ஒன்பது பேர் பலி!

சென்னை ஏப். 27
மதுரை மாவட்டத்திலுள்ள வையூரி என்னுமிடத்திலுள்ள பாண் கிணறென்றிலிருந்து விஷவாயுவினுல் 9 பேர் பலியானுர்கள் என்று அறிவிக்கப்பட்டது.

இக்கிணற்றிலிருந்த ஒரு மரக்கட்டையை அகற்ற இருவர் கிணற்றில் இறங்கினுர்களாம். இவர்கள் இம்மரக் கட்டையை தூக்கியதும் மயங்கி விழுந்தனராம் இவர்களை கிணற்றிலிருந்து வெளியில் கொண்டுவர மேலும் சிலர் கிணற்றில் இறங்கினராம். இவ்வாறே 9 பேர் பலியானுர்களாம். என தெரிவிக்கப்பட்டது.

தீயணைக்கும் படையினரே இவ் ஒன்பது சடங்களை மீட்டனர்,

பலியானவர்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா வழங்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (கு)

## ★ ஒரு பொலிஸ்காரரின் வெறியாட்டம்: 34 பேரைச் சுட்டுக்கொன்றுர்!

சியோல், ஏப். 27
தென் கொரியாவிலுள்ள மாநிலம் ஒன்றில் மது போதையில் இருந்த பொலிஸ்காரர் ஒருவர் அங்குள்ள கிராமத்தவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்தபோது 34 பேர் பலியானதாகவும், 20 பேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

இந்தப் பொலிஸ்காரர் பின்னர் தன் மீது கைக்குண்டை வீசித் தற்கொலை செய்துகொண்டார்.

தனது காதலி மீது ஏற்பட்ட வெறுப்பினுலேயே இவர் மது அருந்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

காயம் அடைந்தவர்களில் அதிகமானவர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. (வெ)

## தலதா யானை 'ராஜா' குணமடைகிறது

(கண்டி)
கண்டி பெரஹறா ஊர்வலத்தில் புத்தபகவானின் புனித தந்தத்தைச் சுமந்து செல்லும் 'ராஜா' என்ற யானைக்கேற்பட்ட கடும் சுகயீனம், தற்போது ஓரளவு தணிந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

74 வயதான 'ராஜா' என்ற மேற்படி யானை கடந்த சில வாரங்களாக நோய்வாய்ப்பட்டிருந்தது இதற்கு சிகிச்சை அளிக்கும் வகையில் நாட்டு வைத்தியமே மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் வருத்தம் குணமடையாது போகவே, ஜனதிபதியின் கவனத்துக்கு இது பற்றித் தெரிவிக்கப்பட்டதும், இலங்கையின் தலைசிறந்த மிருகவைத்தியரான டாக்டர் செல்டன் அத்தபத்து 'ராஜா'வுக்கு சிகிச்சையளிக்கும்படி பணிக்கப்பட்டார்.

டாக்டர் அத்தபத்துவின் தலைமையிலான மிருகவைத்தியர் குழு 'ராஜா'வின் காதுப் பகுதியிலிருந்த கழலை ஒன்றை அறுவைச்சிகிச்சைமூலம் அப்புறப்படுத்தியதையடுத்தே நிலைமை சீரடைந்துவருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

'ராஜா'வின் சுகயீனத்துக்கு பத்திரிகைகள், வானெலி, தொலைக்காட்சி சேவைகள் ஆகியன அளித்த முக்கியத்துவம் வாசகர்கள் அறிந்ததே. (கி)

## எல்-சல்வடோர் தேர்தல் ஜனநாயக விரோதமானது

வாஷிங்டன், ஏப். 27
அமெரிக்கப் பொதுமக்கள் பிரதிநிதிகளுடன் அண்மையில் எல்—சல்வடோருக்கு விஜயஞ் செய்த பிரபல அரசியல்வாதியும், முன்னுள் அமெரிக்க அட்டோர்னி ஜெனரலுமான திரு. ராம்சே கிளார்க், எல்—சல்வடோரில் நடைபெற்ற தேர்தல் நடைமுறையைக் காரசாரமாகக் கண்டித்துள்ளார்.

இத்தேர்தல் ஜனநாயக விரோதமானது என்றும், வாக்களிக்கும் உரிமை பெற்றவர்களில் பாதிப்பேருக்கு வாக்களிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்றும் இவர் தெரிவித்துள்ளார்.

இராணுவ நிர்வாகத்தின் போக்கு, நாட்டின் அமைதியையும், ஜனநாயகத்தையும் ஏற்படுத்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அமைதி நிலவ வற்புறுத்து

புதுடில்லி, ஏப். 27
தென் கிழக்காசியாவில் அமைதி நிலவவேண்டுமென இந்தியாவும், வியட்நாமும் கூட்டாக வெளியிட்ட அறிக்கை ஒன்றில் வலியுறுத்தியுள்ளன. (வெ)

## கிராமோதயசபைத் தலைவர்

(மட்டுவில்)
நுணுவில் கிராமோதய சபைத் தலைவராக இளைப்பாறிய ஆசிரியர் திரு. தம்பிராஜாபோட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். (க)


CENTRIC

சென்ட்றிக் விவசாய பம்ப்.



- உலகப் புகழ் றுெபின் பெட்ரல்/மண்ணெண்ணெய் அல்லது யன்மார் டீசல் எஞ்சின் பொருத்தியது.
- நிகர் நிற்க முடியாத எரிபொருட் சிக்கனம். தனித்துவமான தன்னியக்க எரி பொருள் மாற்றும் விசை.
- இடம் மாற்றும் வசதி கொண்ட பாரம் குறைந்தது.
- நிலைத்து நிற்பதற்காக வார்ப்பிரும்பிலும் பித்தளையிலும் உருவானது.
- சென்ட்றிக் - 30 வருடங்களுக்கு மேல் 60,000 பேர் நம்பிப் பாவிப்பது.

விலை: ரூ. 4,750/- முதல்.
1½'', 2'', 3'', 4'' ரகங்களில் கிடைக்கும்.

Mel Ads

ஜினசேன லிமிட்டெட்,
4, உணுப்பிட்டியா வீதி,
கொழும்பு 2.
தொலைபேசி: 26558/9

## பாரதி நூற்றுண்டுவிழா

(சுழிபுரம்)

காரை நகர் இந்துக்கல்லூரியில் பாரதி நூற்றுண்டு விழா அடுத்தமாதம் 2ம், 3ம், 4ம் திகதிகளில் கொண்டாடப்படவுள்ளது.

கல்லூரி நடராசர் அரங்கில் நடைபெறவுள்ள இம் மாநாட்டில் சென்னைப் பல்கலைக்கழக ஆய்வுத்துறை கலாநிதி புலவர் பொன். தெய்வநாயகி சோதியும், சென்னை காஞ்சிபுரம் மறைமலையடிகள் மன்றத்தைச் சேர்ந்த கலாநிதி கவிஞர் மா. வரதராஜனும் கலந்து கொள்ளவுள்ளனா.

## ஜயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ முருகுப்பிள்ளை மௌன குரு கடவுள் சுவாமிகளின் ஜயந்தி விழா இன்று புதன் கிழமை செல்வச்சந்நிதியிலுள்ள சுவாமிகளின் வாசஸ்தலத்தில் நடைபெறும். இவ் விழாவினை செல்வச்சந்நிதி சுத்தசிவ சமரச சன்மார்க்க சாது சங்க சமாதி குருபீட தருமகர்த்தா சபையினரே நடாத்தி வைப்பர் அன்றைய தினம் பூஜைகளும் ஆராதனைகளும் இடம் பெறும்.

## உ. அ. அதிபர் காரியாலயம் இடமாற்றம்

(கரவெட்டி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு காரியாலயம் அடுத்த மாத இறுதியில் இருந்து மாலி சந்தியில் உள்ள மாடிக்கட்டிடம் ஒன்றிற்கு இடம்மாறவுள்ளது.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரையின் முயற்சியைத் தொடர்ந்தே இக் காரியாலயம் இடம் மாறுகிறது.

இப்பகுதி மக்களின் போக்குவரத்து வசதிகருதியே இக் காரியாலயம் இடம் மாற்றத்துக்கான முயற்சி எடுக்கப்பட்டது.

## ஆசிரியர் நியமனம்

(துணுக்காய் நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் போட்டிப் பரீட்சைமூலம் ஆங்கில ஆசிரியர் தெரிவில் துணுக்காய் பிரிவில் திரு. இ. ஜெயரட்ணசிங்கம் ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்றுள்ளார். இவர் கடந்த 4வருடங்களாக துணுக்காய்பகுதி ப. நோ. கூ. சங்கத்தின் கணக்காளராக கடமையாற்றிவந்துள்ளார். துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இவர் ஒருவரே ஆங்கில ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார். இவரை விட கைப்பணி ஆசிரியராக செல்வி ப. தயாநிதி என்பவரும் விஞ்ஞான ஆசிரியராக செல்வி வீ இராஜேஸ்வரியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் வவுனியா கல்வி அலுவலகத்தில்நடைபெற்றன.

## சுற்றுப் போட்டி

(அரியாலை)

நல்லூரர் சங்கிலியன் மன்றத் திறந்த வெளியரங்குத் திறப்புவிழாவையொட்டி நடாத்தப்பட்ட 2 கழகங்கள் கலந்து கொண்ட மென்பந்துச் சுற்றுப் போட்டியில் முதலாவது இடத்தை நோதேன் ஸ்போட்ஸ் கழகமும், இரண்டாவது இடத்தை ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் பெற்றுக்கொண்டன.

மன்றத்தலைவரும் சட்டத்தரணியுமான திரு. கனகசேசவன் தலைமையில் நடைபெற்ற திறப்புவிழாவில் சோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு கே. கிட்ணர் வெற்றி பெற்ற கோஷ்டிகளுக்குப் பரிசில்கள் வழங்கினர்.


பங்குவழங்குதல்
இப்பொழுது
நடைபெறுகிறது




வானுயர்ந்த
இலாபம்
பெற
லங்கா
சீமெந்து

அத்திவாரத்திலிருந்து வானளாவும் உயரத்திற்கு சிமெந்தின் தேவை அதிகரித்துள்ளது. கட்டிட நிர்மாண வேலைகள் பெருமளவில் கூடியிருப்பதால் சமாளிக்கமுடியாதளவுக்கு சிமெந்தின் தேவையும் அதிகரித்துள்ளது.

இதனை முழுமையாக உணர்ந்த இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம் என்றுமே விற்பனை செய்யக்கூடிய சிமெந்தின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக லங்கா சிமெந்து லிமிட்டெட்டை ஆரம்பித்துள்ளது.

இந்த முயற்சியில் சேர்ந்து நீங்களும் பெருமளவு இலாபம்பெற போதிய வாய்ப்பிருக்கிறது

ஒவ்வொன்றும் 10 ரூபா பெறுமதியான 1.2 கோடி பங்குகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன.
பங்கு வழங்குகையின் மொத்த பெறுமதி 30 கோடி ரூபா

முதல் ஆண்டிலேயே பங்கிலாபம் பெறும் வாய்ப்புண்டு

முதலீட்டு நிவாரணமும் வரிச் சலுகைகளும்

- வரிமதிப்பிடற்குரிய வருமானத்தின் 1/3 பகுதிவரை முதலீட்டு நிவாரணம்
- கம்பெனியின் இலாபங்களின் மீது ஐந்து வருட வரி விடுமுறை
- ஐந்து வருடங்களுக்கு பங்கிலாபங்களுக்கு வரி விலக்கு
- வரி விடுமுறைக்குப் பின்னர் குறைந்த வீத வரி மதிப்பு
- வரி விடுமுறைக்குப் பின்னர் பங்கிலாபங்களின் மீதான வரி நிறுத்திவைக்கப்படமாட்டாது
- வதிவு கம்பெனிகள் பெறும் பங்கிலாபங்களுக்கு வரி இல்லை
- மூலதன இலாபங்களுக்கு வரி இல்லை

பங்கு வழங்குதல் மார்ச் 3 முதல் 1982 ஏப்ரல் 30 வரை

முதலீடு செய்வது பற்றிய விபரங்களைத் தரும் முற்பகர்வின் இலவச பிரதிக்கு இங்கு தரப்பட்டுள்ள கூப்பனை அனுப்பி வையுங்கள்.

நிர்வாக ஆலோசனைப் பிரிவு,
இலங்கை வங்கி, 411, காலி வீதி, கொழும்பு - 3

லங்கா சிமெந்து லிமிட்டெட் பங்கு வழங்குகை மீதான முற்பகர்வின் பிரதியொன்றையும் பங்குகளுக்கான ............விண்ணப்பப் படிவங்களையும் தயவு செய்து அனுப்பி வையுங்கள்.

பெயர் ..............................................

முகவரி ..............................................

லங்கா சிமெந்து லிமிட்டெட்டுடன் சேர்ந்து உறுதியான எதிர்காலத்தை கட்டியெழுப்புங்கள்

லங்கா சீமெந்து லிமிட்டெட்
அல்ம்ஞர் கட்டிடம், 302, காலி வீதி, கொழும்பு - 4
தொலைபேசி: 589126

“தமிழ் ஈழலட்சியத்திற்கு

# தமிழ்மக்கள் ஆணை அளித்தபோது தந்தை செல்வா இருக்கவில்லை”

## தமிழ்ஈழ விடுதலை அணி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

“தந்தை செல்வா ‘தமிழ் ஈழம் என்ற முடிவை எடுத்த பின்பும் முன்னுள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக கூட்டணித்தலைவர்கள் கூறுகின்றனர் கடந்த பொதுத்தேர்தலின் போதே தமிழ் மக்கள் தமிழ்ஈழலட்சியத்திற்கு ஏகோபித்த ஆணையை கொடுத்தார்கள். அப்போது தந்தை செல்வா நம்மத்தியில் இருக்கவில்லை.

தந்தை செல்வா நினைவாலய முன்றலில் நடந்த தமிழ் ஈழவிடுதலை அணியின் கருத்தரங்கில் திரு. கோவை மகேசன் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினுர்.

டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் தலைமையில் நடந்த கருத்தரங்கில் கோவை மகேசன் மேலும் கூறியதாவது ‘தமிழ் ஈழலட்சியத்தில் தமிழ் மக்களின் ஆணையை தந்தை செல்வா பெறவில்லை தமிழ் மக்கள் ஆணையை கடந்த தேர்தலில்தந்தைசெல்வா பெற்றிருந்தால் அவர் அரசுடன் பேச்சுவார்த்தைக்கு சென்றிருக்கமாட்டார். கடந்த தேர்தலில் இன்றைய கூட்டணித் தலைவர்களே தமிழ்மக்களின் ஆணையை பெற்றுர்கள். அவர்கள் அரசுடன் பேச்சுவார்த்தைக்கு சென்றது தவறு. தங்கள் தவறை மூடிமறைக்க தந்தை செல்வாவை இழுக்கின்றுர்கள்.

“தந்தை செல்வா சமஷ்டி ஆட்சி கோரிய போது நான் சமஷ்டிக்கு தமிழ்மக்கள் ஆதரித்த போது தான் அரசுடன் பேச்சுநடத்தினுர். இன்று நிலைமை வேறு தமிழ் ஈழம் என்ற முடிவுக்கு வந்து விட்டோம் இனியும் பேச்சு வார்த்தை பயனளிக்காது.

“சேர். பொன்னம்பலம் இராமநாதன், சேர் பொன் அருணுசலம் போன்ற தலைவர்கள் பிந்திய கால வாழ்வை எடுத்து கூறுமல் ஆரம்பகால அரசியலை எடுத்து காட்டுவது போல் தந்தை செல்வாவின் ஆரம்பகால அரசியல் வாழ்வையே கூட்டணித்தலைவர்கள் உதாரணம் காட்டுகிறுர்கள் தந்தை செல்வாவின் இறுதிக்கால நிலையை எத்து கூறதயங்குகிறுர்கள்:

இன்றையதலைவர்களை தூக்கி எறிந்து விட்டு தேர்தலில் போட்டியிட்டு பாரளுமன்றம் செல்வதற்காக நாம் முயற்சிக்கவில்லை. நாங்கள் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என்றேகூறிவருகிறேம். தமிழ் மக்கள் தேர்தலை நடத்த விடக்கூடாது. இளைஞர்கள் ஒன்று திரண்டு தேர்தலை பகிஷ்கரிக்குமாறு பிரசாரம் செய்ய வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை தலைவர் திரு. இராசநாயகம் கூறியதாவது: “தமிழ் மக்களின் விடுதலை உணர்வை அறிந்து வீட்டிலிருக்க முடியாத நிலையில் இங்கு வந்து எதிர்க்கட்சித்தலைவர் எங்களுக்கு ஆதரவளித்துள்ளார். தந்தை செல்வா என் காலத்தில் தமிழ் ஈழம் கிடைக்காவிட்டாலும் திரு. அமிர்தலிங்கம் காலத்தில் தமிழ் ஈழம் கிடைக்கும் என்றே சொன்னுர். ஆனுல் திரு. அமிர்தலிங்கம் தலைமையின் கீழ் தமிழ் ஈழம்கிடைக்கும் என்று அவர் சொன்னதேயில்லை. ஆதலால் தலைவர்கள் வழி தவறிச்சென்றுலும் தமிழ் மக்கள் விடுதலைப்பாதையில் சென்று லட்சியத்தை அடையவேண்டும்.”

திரு. தேவதாஸ் பேசுகையில் “தமிழர் விடுதலை கூட்டணி எம். பிக்கள் கோட்டை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பாராளுமன்றத்திற்கு செல்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஏப்ரல் 29ல் தமிழ் மக்கள் ஹர்த்தால் செய்யவேண்டும். அன்று தமிழ் பகுதிகளில் போக்குவரத்து ஸ்தம்பிதமடையும். பாடசாலைகள் நடக்காது. படமாளிகைளில் படம் ஓடாது. சந்தை கூடாது, கடைகள் திறக்காது. தமிழ்மக்கள் ஒன்று திரண்டு தங்கள் எதிர்ப்பை அரசுக்கும் உலகிற்கும் காட்டவேண்டும். மாணவர்களும், இளைஞர்களும் இதில் முக்கிய பங்கெடுக்கவேண்டும்.”

திரு. பொன். பூலோகசிங்கம் பேசுகையில் தலைவர்கள் தவறுன வழியில் சென்றுலும் தமிழ்மக்கள் என்றும் சரியான வழியில்தான் சென்று கொண்டிருக்கிறுர்கள் என்று கூறினுர்.

டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் கூறியதாவது: எங்களுக்கு உண்மையான நேர்மையான, அகங்காரமற்ற, தன்னலமற்ற சர்வாதிகாரமற்ற தலைவர்களே தேவை. அவர்கள் தான் எங்களை வழிநடத்தி சென்று விடுதலையைபெற்று தருவார்கள். மக்களிடமிருந்துபெற்ற ஆணையை மறந்து பட்டம் பதவிகளுக்காகவும், சலுகைகளுக்காகவும், தமிழினத்தை காட்டிக்கொடுக்கும் தலைவர்களால் விடுதலை பெற்றுத்தரமுடியாது. எங்கள் இயக்கத்தில் தலைவர்களை வளர்த்து வருகின்றேம். ஒருவர் போனுல் மற்றொருவராக இயக்கத்தை விடுதலைப்பாதையில் எங்கள் இயக்கத்தில் இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து வருகன்றேம். எங்களுக்கு வயது போய் விட்டது. ஆனுல் நாங்கள் இல்லாதகாலத்திலும் தமிழ்மக்களை வழிநடத்தி செல்ல தகுதி பெற்ற உண்மையான இளம் தலைவர்கள் பலர் எமது இயக்கத்தில் இருக்கின்றுர்கள்.

திரு. ஈழவேந்தன் பேசுகையில்: “தமிழினத்தின்லட்சியம் நிறைவேற நாங்கள் இன்று தந்தை செல்வா நினைவாலயத்தில் உறுதி எடுப்போமென்றும் தலைவர்கள் வழிதவறிச் சென்றுலும், இளைஞர்கள், தமிழ்மக்களை சரியான பாதையில் அழைத்துச்சென்று விடுதலை பெற்றுத்தருவாா” என்றுகூறினுர். (க)

# “தமிழ் இனத்தின்விடிவுக்கு ஒரேவழி ஒற்றுமையே”

## ‘அமிர்’ கூறுகிறுர்

(சுழிபுரம்)

“தமிழ் இனத்தின் விடிவுக்கு ஒரேவழி ஒற்றுமையாக இயங்குவதேயாகும். சென்ற தேர்தலின் பின்னர் நாம் ஒற்றுமையாகச் செயல்பட்டதால் நாம் பல சாதனையை நிலைநாட்டியுள்ளோம். நாம் ஒற்றுமையை சிதறடியாது எமது இலட்சியத்தை சென்றடைவோம். எமது ஆற்றலுக்கு அப்பாலான எந்தக் காரியத்திலும் யாரும் ஈடுபடக்கூடாது. அப்படி ஈடுபட்டால் தோல்வியும், பெரும்தொல்லையுமே வந்து சேரும். தம்பிமார் சிலர் ஒரு துப்பாக்கியை கையில் அதுவும் மறைத்து வைத்துக்கொண்டு ஏதோ எல்லாம் கண்டுவிடலாம் என்று கனவு காண்கின்றுர்கள். இவர்களுக்கு நான் ஒன்றை மட்டும் கூறுவேன் நீங்கள் செய்யும் காரியங்களினுல் தொல்லைகள், துன்பங்கள் கூடுமேயொழிய எவ்வித நன்மையும் கிடைக்கமாட்டாது.

(7ம் பக்கம் பார்க்க)


# உலக இந்து மாநாட்டுப் பேராளர்களே

# யாழ். நகர் உங்களை வரவேற்கிறது....

WORLD HINDU CONFERENCE

அகில உலக இந்து மாநாடு

ஆதியும் அந்தமு மில்லா அரும் மதம்
மேதினி உய்ய மேன்மை தரும் மதம்
பாதி மதித்தலைப் பரமன் படைத்த நற்
சோதி மிகு தத்வ வீறு மிகு மதம்

இந்து மத மெனுந் தத்துவ ஊற்றினை
இங்கு வந்து இனி தாராய்ந்து
எங்கள் மதத்தின் பெருமைகள் தன்னை
உலகம் மதிக்க வைத்தீர் வருக

யாழ். நகர் நும்மை வரவேற்கிறது
ஆழ்ந்த அறிவில் பெரியீர் வருக....
அகிலம் செழிக்க இந்து மதத்தின்
அர்த்தம் சொரிந்தீர் வருக வருக.::.

## சி. சின்னத்துரை அண் பிறதர்
39, K K. S வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 283 - 284, ✶ தந்தி: ‘கல்கி’

## கல்கி சன்ஸ், 147, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7711, ✶ தந்தி: ஸ்ரீராம்

## சி. சின்னத்துரை அண் கொம்பனி
25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7357

28-4-82 வரை
**வெஸ்லி** மானிப்பாய்
தினசரி 2.30, 6.15 9.15
ஜெமினி - விஜயா
**ராமு**

மூன்றாவது வாரம்
**ஹரன்** யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாசன்
**தில்லுமுல்லு**

**Regal**
Daily 10-30, 2-15, 4-30, 7-00 9-30
Peter Finch, William Holden
in
**NET WORK**
(Color)
(Winner of four Academy Awards

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
**TARZAN THE APE MAN**
(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
**The Man From Hongkong**

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சாவித்திரி
**காத்திருந்த கண்கள்**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
**பொல்லாதவன்**
(ஈஸ்ட்மன் கலர்)

**சாந்தி** (யாழ்நகர்) 10-30, 2-30, 6-15, 9-45
இந்தியாவிலிருந்து தருவித்த புதிய பிரதி
ஜெய்சங்கர்-ஜெயலலிதா நாகேஷ்
**முத்துச்சிப்பி**

எதிர்பாருங்கள் **கடல்மீன்கள்**
[கலர்]

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
காமினி பொன்சேகா நடித்த
**ஒஹோம ஹொந்தத** சிங்களம்
வெகுவிரையில் **அலைகள் ஓய்வதில்லை**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
Daily 10.30, 2.30, 4.00, 7.00, 9.30
ALEN DELON in
**SCORPIO**
(Color-Scope)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
''காதல் தியாகத்திலேதான் முழு வடிவம்பெறுகிறது!'' பார்ப்பதற்கு மனங்கவரும் வண்ணக் காட்சிகளும், கேட்பதற்கு இனிய பாடல்களும், உணர்வதற்கு கருத்தாழம் நிறைந்த உரையாடல்களும், மொத்தத்தில் அற்புதமான திரைக் காவியந்தான் நட்சத்திரம்!
இப்பொழுது 5வது வாரமாக வெற்றிநடைபோடுகிறது
**நட்சத்திரம்**
(ஈஸ்ட்மன் கலர்)

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 15ம் திகதி
புதன்கிழமை
(28—4—82)

மேடம்: அதிஸ்டதேவதையின் அழைப்பு உங்களுக்குக் கிடைக்கும் திரைப்படத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு உற்சாகமளிக்கக்கூடும், செல்வாக்குள்ள ஒருவரின் ஆதரவு தப்பாமல் கிட்டும்.

இடபம்: பாதையில் பழுதுண்டு பகைவர்காத்திருப்பர் செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும் சிலருக்கு உடல் நலமு பாதிக்கப்படலாம்.

மிதுனம்: உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள் குடும்பத்தில் சிறு பூசல்கள் தோன்றி மறையும்.

கடகம்: பெரிய இடத்துச் சினேகிதம் இன்று ஏற்படலாம் புதிய வழிசள்மூலம் பணம் கிடைக்கும் குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கும் இடமுண்டு.

சிங்கம்: ஏமாந்த நேரத்தில் உங்களை வீழ்த்திவிடுவதற்குச் சிலர் திட்டம்போடுவாவர்கள். எச்சந்தர்ப்பத்திலும் விழிப்புணர்ச்சியுடன் இருப்பது விரும்பத்தக்கது.

கன்னி: சமூகத்தில் அந்தஸ்து உயர்வதற்கு இடமுண்டு. பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமையைத் தேடித்தரும் மனத்தொடர்பான காரியங்களில் அதிகம் ஈடுபடுவீர்கள்.

துலாம்: இதயம் எரிமலையாகும். எதிரிகள் தாக்குவார்கள் ஏமாற்றத்துக்கும் இடமுண்டு. அதிக பேச்சை தவிர்த்துக்கொள்வது நன்று.

விருச்சிகம்: உறவுமுறைகள் பலப்படும் உற்சாகம் பெருகும் புதிய நண்பர்கள் புடைசூழ்வார்கள் பணவிவகாரங்களில் மகிழ்சியை அளிக்கும்.

தனு: எண்ணிய கருமம் கண்ணியமாய்முடியும் இன்று களஸ்திரவழியால் பொருள் வரவும்உண்டு. பெரியோர்களின் மதிப்புக்கிடைக்கும்.

மகரம்: பலவழிகளிலும் பணம் பாழாகும். வேண்டாத விருந்தினர்களின் உவகை உங்களுக்கு வேதனையைத் தரலாம் நண்பர் ஒருவரின் உடல் நலம் பாதிக்கப்படலாம்.

கும்பம்: பெருமையுடன் தலைநிமிர்ந்து வாழ்வீர்கள், பிதாவழித்தனமும் சேரும். தானதருமங்களில் ஈடுபாடு ஏற்படும். பெரியோர்கள் ஆசி கூறுவார்கள். புகழும் வந்து சேரும்.

மீனம்: எதிலும் ஒருமாற்றத்தை விரும்புவீர்கள் புதிய எண்ணங்கள் மனதிற் தோன்றும் வியாபாரிகளுக்கு அதிக ஆதாயம் கிடைக்கலாம்.

சோதிடக்கலாநிதி
**திருமலை**
**க. வேலுப்பிள்ளை**

## இடமாற்றம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கீரிமலைப்பகுதி சுகாதாரப் பரிசோதகராக கடந்த 6 ஆண்டு காலம் கடமையாற்றிய திரு. வீ.க. சிங்கராஜா இந்த மாதம் முதல் முல்லைத்தீவு சுகாதார வைத்தியஅதிகாரி பிரிவிலுள்ள தண்ணீரூற்று முள்ளியவளை பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (க)

## சபைத்தலைவர் திடீர் விஜயம்

(புலோலி)

யாழ். மாவட்டஅபிவிருத்தி சபை புலோலி உபஅலுவலகத்திற்கு மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

அலுவலக நிர்வாகம் சம்பந்தமாகப்பரிசீலனைசெய்ததுடன் அலுவலகக் குறைபாடுகள் பற்றியும்சபைத்தலைவர் கேட்டறிந்தார்.

## இளைஞர் சங்க ஆண்டு விழா

(பண்டத்தரிப்பு)

மாதகல் இளைஞர் சங்கத்தினதும் சனசமூக நிலையத்தினதும் 45ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் மே மாதம் 23ம் திகதி நடைபெறவுள்ளது. ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியிலமட்டு வண்டி சவாரிப் போட்டியொன்றை நடத்துவது என்றும், பட்டிமன்றம், கவியரங்கு ஆகிய நிகழ்ச்சிகளை நடத்துவது என்றும், பிரதம அதிதியாக எதிர்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தை அழைப்பது என்றும் நிலையத் தலைவர் திரு. இ. நாகராசா தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# தாயார் கண்டித்ததால் 11 வயது சிறுவன்தற்கொலை

[மாவிட்டபுரம்)

பாடசாலைக்கு போகாமல் டிமிக்கி விட்டுத்திரிந்த 11 வயது சிறுவனை தாயார் கண்டித்ததால் அவன் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

சுழிபுரத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இறந்த சிறுவன் சிவகுணநாதன் குணபாலன் என்பவராவார்.

இச்சிறுவன் பாடசாலைக்கு செல்லாமல் கூட்டாளிகளுடன் சேர்ந்து விளையாடித்திரிந்ததாகவும் தீயபழக்கங்கள் பழகுவதாக இருந்தால் வீட்டில் இருக்க வேண்டாம் எங்கேயாவது போய்விடு' என்று தாயார் கண்டித்ததையடுத்து மனமுடைந்து காணப்பட்டதாகவும் பின்னர் வெளியே சென்ற இச்சிறுவன் வீடு திரும்பி சாப்பிடாமல் அடம் பிடித்தார் என்றும் பின்னர் வீட்டின் பின்புறம் இருந்த நஞ்சை எடுத்து அருந்தினார் என்றும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராஜா விசாரணை நடத்தி இறுதியில் தற்கொலை என்று தீர்ப்பளித்தார். க

# நண்பர்களுடன் நாட்களை கழித்த இளைஞர்தற்கொலை

[மாவிட்டபுரம்]

சம்பளம் எடுத்தபின் வீட்டுக்கு வராமல் கூட்டாளிகளுடன் சேர்ந்து திரிந்த இளைஞர் ஒருவர் சில தினங்களின் பின் வீட்டின் முன்பாக நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

பன்னாலையைச் சேர்ந்த பூதப்பிள்ளை இரவீந்திராஜா (21 வயது) என்பவரே இவ்வாறு நஞ்சருந்தி மரணமானவராவார்.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் இவர் வேலை பார்த்தார், சம்பளம் எடுக்கும் நாட்களில் இவர் வீட்டுக்கு வருவதில்லை என்றும் கூட்டாளிகளுடன் சேர்ந்து திரிந்து சம்பளப்பணத்தை முடித்த பின்னரே வீடுவருவார் என்றும் இதன் காரணமாக வீட்டுக்காரர்கள் இவரைக்கண்டித்துள்ளனர் என்றும் 10 நாட்களுக்குப்பின் வீட்டின் கேற்றினால் ஏறி விழுந்து வீட்டினுள் வந்து நஞ்சருந்தினரென்றும் மேலும் கூறப்பட்டது. திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராஜா தற்கொலை என தீர்ப்பளித்தார். [க]

## அகிலஇலங்கைஉதைபந்தாட்டபோட்டி:

# யாழ். பொலிஸ் கோஷ்டி சாம்பியனாகத் தெரிவு!

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பொலிஸ் ரீதியில் நடைபெற்ற 6 பேர் கொண்ட ''நொக் அவுட்'' உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணப் பொலிஸ் கோஷ்டி சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

இவ்வுதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் கல்கிசை 'ஏ பிரிவு' பொலிஸ் கோஷ்டியை, யாழ். பொலிஸ் கோஷ்டி 2:1 என்ற கோல்களால் தோற்கடித்து வெற்றிபெற்று சாம்பியனாகியது.

யாழ். பொலிஸ் கோஷ்டியில் திருவாளர்கள்: எம். சிவதாசன், ஆர். ஜெயவர்த்தன, எம். ஜலீனதீன், கே. மரியதாஸ், எஸ். விக்னேஸ்வரன், எம். பெர்ணாண்டோ ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இப்போட்டி பம்பலப்பிட்டி பொலிஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

# ''எமது பனம்சீனி தரத்தில் குறைந்ததல்ல!''

## தலைவர் பெருமிதம்

(மட்டுவில்)

''இலங்கையில்என்றும்எதிர்பாராத அளவிற்கு பனம்சீனி, பனைவெல்லம், பனம்வடிசாராயம் உற்பத்திகள்அதிகபலனைத் தந்துள்ளன. அது மட்டுமல்ல பிறநாட்டுச் சீனியுடன் எமது பனம் சீனி போட்டிபோடக் கூடிய அளவிற்கு தரம் மிகுந்துள்ளதாக இருக்கிறது.

இவ்வாறு பனம்பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சே. நடராசா மட்டுவில் வடக்கு மானாவளையில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பிலும் பனம்பொருள்உற்பத்திபயிற்சி நிலையம் நிறுவும் ஆலோசனைக் கூட்டத்திலும்கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் கூறினார்.

திருமதி சி. சின்னத்துரை தலைமையில் வரவேற்பும், ஆலோசனைக்கூட்டமும் நடைபெற்றது. திரு. நடராசா தொடர்ந்து கூறியதாவது:

''எமது நாட்டின் மிகமுக்கிய மூலவளங்களில் பனையும் ஒன்று. இதை எவ்வளவுதூரம் அபிவிருத்தி செய்யமுடியுமோ அவ்வளவு தூரம் அபிவிருத்தி செய்யவேண்டுமென்பதே எனது இலட்சியம்.

''இன்று நாம்உற்பத்திசெய்யும் பனம்பொருட்கள் எந்த வகையிலும் பிறநாட்டுஉற்பத்திகளுக்குச் சளைத்தவையல்ல என்பதை நிரூபித்து வருகின்றன. இதேபோன்று, எமது பனம் வடிசாராயமும் வெளிநாட்டு உற்பத்திகளுடன் போட்டிபோடக்கூடிய அளவுக்கு தரம் உயர்ந்ததாகஇருக்கின்றது. ஏனையபொருட்களும் தரத்தில் உயருமென்பதில் ஐயமில்லை'' என்றார்.

# சிறப்பாக நடந்த திருவடி பாதபூசை

(கொழும்பு)

கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி தேவஸ்தானதிருஞானசம்பந்த கானசபையில் திருமுறைச் செம்மல் வே. அண்ணாமலை சுவாமிகளுக்கு திருவடி பாத பூசை சிறப்பாக நடைபெற்றது. திரு. வி. ரி. வி. தெய்வநாயகம்பிள்ளை மற்றும் அகில இலங்கை திருமுறைமன்ற அமைப்பாளர் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி, வேலணை மேற்கு இளைஞர்பேரவை செயலாளர் ப. பாலசுப்பிரமணியம் ஆகியோர் சுவாமிகளிடம் ஆசி பெற்றனர். சுவாமிகள் அனைவருக்கும் இலவச பிரசுரங்கள் வழங்கினர்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இயக்கச்சி சந்திக்கண்மையில் கிணறு, வீட்டு வசதிகளுடன் கூடிய 20 (இருபது) பரப்புத் தென்னங்காணி உண்டு. விபரங்களுக்கு உடன்தொடர்பு கொள்ள: ப. பொன்னுத்துரை, 2ம் குறுக்குத் தெரு, கடற்தொழிற்பயிற்சி நிலையம், யாழ்ப்பாணம். 2997

டச்சுவீதி, சண்டிலிப்பாயில் எட்டுப்பரப்பு இரண்டு குளி வயல்காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: பி. ஜே. சோமசுந்தரம், கலா பவனம், சண்டிலிப்பாய். 3000

பிடவை வியாபாரம் செய்யக்கூடிய அனுபவம் உள்ள ஆண்கள், பெண்கள் நேரில் வரவும். த. சங்கரப்பிள்ளை பிறதர், இல. 21 மக்கள் நவீனசந்தை, யாழ்ப்பாணம். 2994

## தேவை

அனுபவமும், ஆற்றலுமிக்க கொம்பஸிட்டர்கள், பைன்டர்கள் தேவை. நேரில் வரவும். ஈகிள்பிரின்டிங் வேக்ஸ் லிமிட்டெட், 161, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 2999

காய்ந்த வேப்பம் பூ தேவை. விநாயகம் இன்டஸ்றியல் வேக்ஸ், 39, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 3001

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற யாழ்ப்பாணம் சிறும்பியடி ஒழுங்கையில் வசித்தவரான ஸாபிர் ஹுஸேன் ஸரபாலி என்பவரின் மரணசாதனபற்ற மரணச்சொத்தின் விடயத்தில்

— மரணமெய்தியவர்

திருமதி. ஸால்மா பாய் ஸரபாலி, இல. 30, சிறும்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

—மனுதார்

மரணச்சொத்து) நியாயாதிக்கம் ) இல. 3403

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981ம் ஆண்டு ஐப்பசி மாதம் 23ம் திகதியன்று முற்பகல் 9–00 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1982ம் ஆண்டு ஏப்ரல் மாதம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
தா. குலஞானம்.
பதிவாளர்

5–3–82 காரணம் காட்டும் திகதி 30–4–82க்கு நீடிக்கப்பட்டது.

தா. குலஞானம்.
பதிவாளர்

தயாரித்தது
த. சண்முகராஜா.
மனுதாரின் சட்டத்தரணி.
2995

## வகுப்பு

3–5–82 டெலிவிஷன் வகுப்புகள் செய்முறைப் பயிற்சியுடன் ஆரம்பமாகவுள்ளன. விபரங்கட்கு: AUTO COOL ENGINEERS, (சாந்தி சினிமா முன்பாக) கந்தப்ப சேகரம் வீதி, யாழ்ப்பாணம். 2943

## தமிழ்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆதலால் கட்டுப்பாட்டுடன் கண்ணியமாக நடந்து கொள்ளுங்கள். ஒற்றுமையாகசெயல்படுங்கள்''.

இவ்வாது எதிர்க்கட்சிமுதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் பண்ணாகம் அண்ணா கலைமன்றத்தின் 13வது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

பண்ணாகம் கிராமஅபிவிருத்திச்சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு திரு. வி. மகாதேவன் தலைமை வகித்தார். பண்டிதர் ப. இராசகுருவும் சிறப்புரையாற்றினார்.

புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர் வெ. அன்பழகன், செயலாளர் ஆ. பஞ்சாயுதன், பொருளாளர் க. பேரின்பநாதன்.

# சதாவதானிக்குமணிமண்டபம் அமைச்சர் ‘இராசு’ நிதியுதவி

(புலோலி)

''தமிழ்ப் பேரறிஞரான சதாவதானி கதிரவேற்பிள்ளையின் ஞாபகார்த்தமாக இங்கு மணிமண்டபமொன்று நிறுவப்படவுள்ளது. இம்மணிமண்டப அமைப்புக்கான நிதியுதவியை வழங்கவுள்ள பிரதேச அபிவிருத்தி இந்து கலாச்சார தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சர் திரு. எஸ். இராசதுரையைப் பாராட்ட வேண்டும்''

இவ்வாறு சதாவதானி கதிரவேற்பிள்ளையின் 75வதுஆண்டு நினைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரன் குறிப்பிட்டார். சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத் தலைவர் திரு. மு. பொ. வீரவாகு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தொடர்ந்து உரையாற்றிய அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரன் குறிப்பிட்டதாவது:

''சதாவதானி கதிரவேற்பிள்ளையின் ஞாபகார்த்தமாகத் தற்போதுள்ள சனசமூக நிலையக் கட்டிடம் போதுமானதல்ல. ஆனால் இச் சனசமூக நிலையம் சதாவதானியின் பெயரால் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் சதாவதானியின் ஒப்பற்ற நிலையைப் புலப்படுத்தி நிற்கின்றது''

சதாவதானி கதிரவேற்பிள்ளை இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலும் பெரும் புகழ் பெற்றவர். கடந்த 75 ஆண்டுகளாக அவரின் ஞாபகார்த்தமாக இந்தச்சிறிய கட்டிடத்தைக் கொண்ட வாசிகசாலை மட்டுமே நிறுவப்பட்டுள்ளது.

தமிழ்கூறும் நல்லுலகம் போற்றும் சதாவதானிக்கு ஞாபகார்த்த மணிமண்டபமொன்று அமைத்து அவரைப் பற்றிய பெருமையினையும் அவர் வாழ்ந்து காட்டிய அறிவுத் திறனையும் வருங்காலச் சந்ததியினருக்குத் தெரியப்படுத்த வேண்டியது எமது தலையாய கடமையாகும்.

இச்சனசமூக நிலையத்தினர் சதாவதானி கதிரவேற்பிள்ளையின் ஞாபகார்த்தமாகமேலும் சிறந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சிவத்தமிழ்செல்விதங்கம்மா அப்பாக்குட்டி உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: சுவாமி விபுலானந்தர் சி வை. தாமோதரம்பிள்ளை போன்ற தமிழ்ப் பெரியார் வழித்தோன்றலிலேயே சதாவதானி கதிரவேற்பிள்ளை தோன்றினார். இவர் தமிழுக்கும் சைவத்திற்கு மாற்றிய தொண்டு அளப்பரியது. சதாவதானிக்கு விழா எடுப்பது மட்டும் போதாது. அவரின் வாழ்க்கை முறைகளையும், நடவடிக்கைகளையும் நாமும் எமது எதிர்காலச் சந்ததியினர்களும் பின்பற்றிநடப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

திரு ஆ. தேவராசன் கதிரவேற்பிள்ளையின்பணிகள்பற்றி உரையாற்றினார். விழா ஆரம்பத்தில் யாழ்ப்பாண உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளர் திரு எஸ். ரீ. மார்க்கண்டு சதாவதானி கதிரவேற்பிள்ளை சிலைக்கு மலர்மாலை அணிவித்தார். இவ்விழாவையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசில்களைத் திருமதி ஞானச்சந்திரன் வழங்கினார்.

# ஏப்ரல் 29-ல் பூரண ஹர்த்தால் 6 இயக்கங்கள் வேண்டுகோள்!

(யாழ்ப்பாணம்)

''நாளை 29ம் திகதி பரிபூரண ஹர்த்தால், அனுஷ்டியுங்கள் தமிழன் தன்மானம் காக்கவும், தமிழீழம் மீட்கவும் உறுதி பூணுங்கள்''.

தமிழீழ விடுதலை அணியும் மற்றும 5 இயக்கங்களும் கூட்டாக வெளியிட்டுள்ள வேண்டுகோளில் மேற்கண்டவாறு கூறப் பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைஅணி ஈழ மாணவர் பொதுமன்றம், யாழ் பல்கலைக் கழக மாணவர்அவை தமிழ் இளைஞர் பேரவை(விடுதலை அணி) புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அரச கூட்டுத்தாபன ஊழியர் சங்கம்(யாழ். கிளை) இவ்வேண்டுகோளைவிடுத்துள்ளது.

இவ்வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது; தமிழீழ சுதந்திர ஆட்சியைப்படையெடுத்து வந்து கைப்பற்றி ஒரே இலங்கையை– ஐக்கிய இலங்கையை உருவாக்கிய பெருமை சிங்களவர்களின் இராச்சியமாகியகோட்டைஅரசுக்கேஉண்டென்றுதிமிர்த்தனமாகக் கூறிக்கொண்டே அதே கோட்டே அரசு அமைந்திருந்த ஸ்ரீ ஜெயவர்த்தன புரத்தில் பழைய சிங்கள இராசதானியின் பாணியில் அமைக்கப்பட்ட புதிய நாடாளுமன்றத்தில் ஏப்ரல் 29ஆம் தேதி குடிபுகுகிறது. ஸ்ரீலங்காவின் முதலாளித்துவ ஏகாதிபத்திய அரசாங்கம் அதுமட்டுமல்ல தமிழீழ அரசைச் சிங்களத்தளபதி சப்புமால் கைப்பற்றியதாகச் சொல்லப்படும் வெற்றிப் பதாகையும் அங்கு இடம் பெறப் போகிறது.

ஸ்ரீலங்காவின் அரசாங்க அமைச்சரும், கோட்டே எம். பி.யுமான திரு. ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ் 19–7–79ல் பழைய நாடாளுமன்றத்தில் கூறியுள்ளதைப் படியுங்கள். மாபெரும் தளபதியும் இளவரசனுமாகியசப்புமால்கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுரத்திலிருந்து யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்தது அதற்குத்தானே தலைமை தாங்கிச் சென்று ஆயுதபலத்தின் உதவியுடன் பலவந்தமாக யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி இத்தீவு முழுவதையும். ஐக்கியப்படுத்தி ஒரேயொரு பதாகையின்கீழ் கொண்டுவந்த ஒரு காலம் இருந்தது. வரலாற்றுப் பெருமைமிக்க கோட்டே ஸ்ரீஜெயவர்த்தனபுரத்துக்கு இதே நாடாளுமன்றம் இடம் பெயரும் போது அந்த பதாகையை நீங்கள்அங்குகாணமுடியும்,

''இதற்குப் பதிலளிக்கும் வகையில் பின்னர் ஒருமுறை 30–11–19 9இல் பழைய நாடாளுமன்றத்தில் உரையாற்றிய கூட்டணியின் மூத்த தலைவர்களில ஒருவரான திரு.வி.என். நவரத்தினம் பின்வருமாறு கூறியுள்ளார்.

''உங்கள் புதிய நாடாளுமன்றக் கூட்டத்துக்கான வரைபடத்தை பார்த்தோம். எங்களின் எத்தனைபேர் கோட்டேக்கு வருவோமோ எனக்குத் தெரியாது. நல்லது நம்மில் சிலர் சங்கிலித் தோப்புக்குப் போகக்கூடும்,

''இவ்வாறு அன்று கூறிய த.வி.கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழீழ சுதந்திரத்தை மீள்விக்கஆணைபெற்றுள்ளவர்கள் இன்று ஸ்ரீ ஜெயவர்த்தபுரத்து பாராளுமன்றத் திறப்பு விழாவில் ஏப்ரல் 29ல் கலந்து கொள்ள முடிவெடுத்துவிட்டனர்.

‘ தந்தை செல்வாவின் இறுதிக்கட்டளையை, மக்கள் கொடுத்த ஆணையை மீறுகின்றனர். எனவே ஏப்ரல் 29ஆம் திகதி தமிழ் வணிகர்களே! தொழிலதிபர்களே தொழில் நிலையங்களை மூடி துக்கம் அனுஷ்டியுங்கள்.

மாணவ, மாணவியரே பாடசாலைகளையும், கல்லூரிகளையும் பகிஷ்கரியுங்கள்..... பொதுமக்களே கறுப்புப்பட்டி அணிந்து அல்லது கறுப்புக் கொடி தூக்குங்கள். படமாளிகைகளையும் கேளிக்கைக் கொண்டாட்டங்களையும் பகிஷ்கரியுங்கள். படமாளிகையின் சொந்தக்காரர்கள் அன்றைய தினம் படமாளிகையை மூடுங்கள். ஏப்ரல் 29 இல் பூரண ஹர்த்தால் அனுஷ்டியுங்கள்.

(க)

## ‘பிலிப்’பின் சிலை திறப்பு

(கொழும்பு)

கொழும்புத் துறைமுக வளவிற்குள் முன்னாள் அமைச்சர் பிலிப் குணவர்த்தனவின் சிலையை வர்த்தக, கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி திறந்துவைத்தார்.

(வெ)

WATER PROBLEM

Do you have a water Problem?
Get your advice from Gets
Get your water through Gets
Get your Tube Wells done through Gets
Get it Cheaper and Faster through Gets!

GLOBAL ENGINEERING TECHNOLOGY SERVICES
32, Kachcheri–Nallur Road, Jaffna.
Tel–7667. 2993

தங்க நகைகளுக்கும் தங்க கட்டிகளுக்குமான பணவசதி

த பினன்ஸ் கம்பனி
வழங்கும் மற்றுமொரு புதிய திட்டமாக
தங்க நகைகளுக்கும்,
தங்க கட்டிகளுக்குமான
பணவசதி
வழங்க முன்வந்துள்ளது. உங்களுக்கு பண நெருக்கடி ஏற்படும்போது, எம்முடன் கலந்தாலோசித்து, தவணை முறையிலோ, குறிப்பிட்ட கால எல்லையிலோ, பணத்தைச் செலுத்தி உங்கள் தங்க நகைகளையோ அல்லது பவுண் கட்டிகளையோ பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
விற்பனை முகாமையாளர்,

த பினன்ஸ் கம்பனி லிமிட்.
249, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7680

# போக்லண்ட் தீவு மீது பிரிட்டன் ராணுவ தாக்குதல்

## "யுத்தத்தைத் தவிர்ப்பதானல் ஆர்ஜென்டீன வாபஸாக வேண்டும்"

லண்டன், ஏப். 27

**போக்லண்ட் தீவுகள் மீது அடுத்த 48 மணித்தியாலங்களுக்குள் பிரிட்டன் இராணுவத்தாக்குதலை மேற்கொள்ளலாம் என்று லண்டன் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.**

போக்லண்ட் தீவுகளில் யுத்தம் தவிர்க்கப்படவேண்டுமானல் ஆர்ஜென்டீன துருப்புக்கள் அங்கிருந்து வாபஸ் பெறப்படவேண்டுமென்று பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாகரட்தட்சர் தெரிவித்துள்ளார்.

இப் பிரச்னைக்கு காலவரையற்ற பேச்சுவார்த்தைகள் மூலம் தொடர்ந்தும் தீர்வு காணமுடியாதென்றும் அவர் தெரிவித்தார்.

போக்லண்ட்தீவுகள் பிரச்னையில் அதிகமான அளவில் ஈடுபட்டு தீர்வுகாணுமாறு பிரிட்டிஷ் தொழிற்கட்சி தலைவர் ஐ. நா. சபையைக் கேட்டுள்ளார்.

தென்ஜோர்ஜியாவை பிரிட்டன் கைப்பற்றியதைத் தொடர்ந்து ஆயிரத்திற்கு மதிகமானேர் ஆர்ஜென்டீனவின் ஜனதிபதி மாளிகைக்கு முன்னல் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தியதாக அறிவிக்கப்பட்டது.

தென் ஜோர்ஜியாவை பிரிட்டன் கைப்பற்றியதைத் தொடர்ந்து ஆர்ஜென்டீன அரசாங்கம் மௌனம்சாதித்து வருவதாகக் கூறப்பட்டது.

போக்லண்ட் தீவுகள் பிரச்னைக்கு தீர்வு காண ஐ. நா. சபை தவறிவிட்டதென்று அமெரிககாவிற்கான ஐ. நா. தூதுவர் திருமதி பற்றிக் தெரிவித்துள்ளார். பிரிட்டனுக்கு எதிராக ஏனைய நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதிக்கவேண்டுமென்று ஐ. நா. சபையில் ஆர்ஜெண்டீன கொண்டுவரவிருந்த தீர்மானத்தை கைவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஏனைய நாடுகள் இத் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவிக்காததனலேயே ஆர்ஜன்டீன இத் தீர்மானத்தை கைவிட்டதாகக் கூறப்பட்டது. (வெ)

## இங்கிலாந்திலிருந்து சாட்சிகள்: கொலைவழக்கு ஒத்திவைப்பு

[கொழும்பு]

இலங்கையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய வண. பிதா, மத்தியூ பீரிஸ், திருமதி டால்றீன் இங்ரம் ஆகியோர் சம்பந்தப்பட்ட கொலைவழக்கு பிரதான சாட்சிகள் மூவர் இங்கிலாந்தில் இருந்து வரும்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திருமதி மத்தியூ பீரிஸ்சையும், திரு. இங்ரத்தையும் திட்டமிட்டுக் கொலை செய்ததாக வண பிதா மத்தியூஸ், திருமதி இங்ரம் ஆகியோர்மீது இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

மேல்நீதிமன்ற நீதிபதிகளான திரு. டியூட்டர் டி. அல்விஸ், திரு. பி. ராமநாதன், திரு. டபிள்யூ. விக்கிரமசேகரா ஆகியோர் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைகள் டிரயல் அட்பார் முறையில் கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கெடுக்கப்பட்டது.

பிரதிசொலிஸிடர் ஜெனரல் திரு. திலக் மாரபொன, இவ் வழக்கிற்குத் தேவைப்படும் மூன்று முக்கிய சாட்சிகள் இங்கிலாந்தில் இருக்கின்றனரென்றும் அவர்கள் இலங்கைவர தமக்கு ஏற்படும் செலவை இலங்கை அரசிடம் கோரியுள்ளதாகவும் அரசு அதற்கு அனுமதித்தபோதிலும், தற்போது அவர்களிடமிருந்து எவ்வித தகவல்களும்கிடைக்கவில்லை என்றும் தெரிவித்து, அச்சாட்சிகளை வரவழைக்கும்வரை கால அவகாசத்தை நீதிமன்றிடம் கோரினர்.

இதனையடுத்து மேல் நீதிமன்ற நீதிபதிகள் இவ்வழக்கை செப்டம்பர் மாதம் இரண்டாம் திகதி வரை ஒத்திவைத்துள்ளனர். [கி]

## திருமுறை மன்றத்துக்கு அமைச்சர் பாராட்டு

(கொழும்பு)

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற அகில உலக இந்து மகாநாட்டு நிறைவுநாள் விழாவில் அகில இலங்கை திருமுறைமன்ற அமைப்பளர் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி, திருமுறை மன்ற இலவசப் பிரசுரங்களை பிராந்திய அபிலிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையிடம் வழங்கியபோது' அமைச்சர் இராசதுரை அகில இலங்கை திருமுறைமன்ற சேவைகளை வெகுவாகப் பாராட்டி மன்றத் தேவைகளை நிறைவேற்றித்தருவதாக உறுதி கூறினர்.

மன்ற இலவசப் பிரசுரங்களை பிரதமர் திரு ஆர். பிரேமதாசா மற்றும் குருமகாசந்நிதானங்கள் ஆதீனகர்த்தாக்கள், சாதுக்கள், பிரமுகர்கள், நர்த்தனசுந்தரி செல்வி சொர்ணமுகி ஆகியோருக்கும் மண்டபத்தில் குழுமியிருந்தவர்களுக்கும் மன்ற அமைப்பாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி இலவமாக வழங்கினர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா நடராசா

யாழ்ப்பாணம் ஸ்ரேசனடி ஆனந்தா தேநீர் சாலை உரிமையாளர் கந்தையா நடராசா காலமானர். இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், நாகேஸ்வரி, சிவசோதி ஆகியோரின் தந்தையாரும், நவரட்ணம் ஸ்ரோஸ் உரிமையாளர் நவரத்தினம், கணக்காளர் தர்மலிங்கம், சரஸ்வதி ஆகியோரின் தமயனுமாவார். மரணச் சடங்கு[இன்று] 28—4—82 புதன்கிழமை மாலை 3-00மணிக்கு 29, புதிய அத்தியடி வீதியிலிருக்கும் இல்லத்தில் நடைபெற்று வில்லூன்றி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

3006

## பதவியில் நீடிப்பார்

[கொழும்பு]

விவசாய அபிவிருத்தி, ஆராய்ச்சித்துறை அமைச்சின் செயலாளர் திரு. ரஞ்சன் விஜேரத்ன தொடர்ந்து அப்பதவியிலிருந்துவருவாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளதாக சில பத்திரிகைகளில் ['ஈழநாடு' அல்ல] வெளிவந்த செய்தி தவருனதாகுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது, [வெ]

## இப்படியும் நடக்கிறது

அகில உலக இந்து மாநாட்டில் கலந்துகொண்டவர்களில் அதிகமானவர்கள் இந்தியாவிலிருந்து வந்த பேராளர்கள்தான்.

இதில், அசாதாரணமான செய்தி என்னவென்ருல், இலங்கையிலுள்ள ஒரு அதி முக்கிய ஹைகமிஷனருக்கு அழைப்பிதழே கிடைக்கவில்லை!

அழைப்பிதழ் வரும் வரும் என்று ஆவலுடன் காத்திருந்த அவர், மாநாட்டு தொடக்கவிழாவன்றும் அழைப்பிதழ் கிடைக்காததால் வருத்தப்பட்டு, தமது செயலாளர் மூலம் பிரதேச அபிவிருத்தி அமைச்சுடன் தொடர்பு கொண்டபோது —

''தபால் சேவையில் நம்பிக்கை இல்லை. அதனுல்தான் நேரடியாகவே அழைப்பிதழை இன்று அனுப்பிவைக்கின்ருேம்...'' என்று அமைச்சு அதிகாரியிடமிருந்து பதில் கிடைத்ததாம்.

மூன்று மணி நேரத்துக்கும் அதிகமாகக் காத்திருந்து பொறுமையிழந்த ஹைகமிஷனர், கடைசியில் உயர்ந்த அந்தஸ்தின் சீட்டைப் பயன்படுத்திச் சென்ருராம்!

★ ★ ★ ★ ★

உலக இந்து மாநாட்டைப் பார்க்க விரும்பிய வெளிநாட்டுச் செய்தியாளர்களில், சீன செய்தி நிறுவனத்தைச் சேர்ந்தவர்களும் அடங்குவர்.

எவ்வளவோ முயற்சித்தும் சீன செய்தி நிறுவனத்தின் செய்தியாளர்களுக்கு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் உலகப் பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கிய இடத்தில் ஆசன வசதி — அனுமதி கிடைக்கவில்லை.

கடைசியில் இச்செய்தியாளர்கள் கால்கடுக்க, நின்றுகொண்டே நிகழ்ச்சிகளைக் கண்டுகழித்தனராம்!

அடிக்குறிப்பு: இம்மகாநாட்டு மண்டபத்தை இலவசமாகக் கட்டிக் கொடுத்தவர்கள் சீனர்கள்தான்!

**'ஊடுருவி'**

## தமிழ் மக்களின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மலேசியாவைச் சேர்ந்த திருமதி தேவகி கிருஷ்ணன் உரையாற்றுகையில் ''மலேசிய நாட்டில் எந்த மதத்துக்கும் பூரணசுதந்திரமுண்டு, அங்கு இந்துமதம் பெருவளர்ச்சிகண்டிருக்கிறது. இதனுல்தான் நாம் சந்தோஷமாக வாழ்கின்ருேம்'' என்ருர்.

யாழ். திறந்த வெளியரங்கில் நேற்றிரவு பல பேராளர்கள் உரையாற்றினுர்கள். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. [கெ]

## நோயாளி..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யத்தனம் எடுத்தும், முயற்சிகள் பலிக்கவில்லை!

யாழ். தட்டாதெரு சந்தியைச் சேர்ந்த லொறிச்சாரதி எஸ். அறுமுகம் என்பவர் இவ்வருடம் பெப்ரவரி மாதம் 28ம் திகதி மதவாச்சியில் லொறி விபத்துக்குள்ளாகி, அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுத்திக்கப்பட்டு, ஆபத்தான நிலையில் பின்னர் இம்மாதம் 2?-ம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இம்மாதம் 25-ம் திகதி இவர் சாலமானர்.

## என்னை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிகரெட்டினுல் சுடுவார். உடம்பு முழுவதும் சுட்டனர். சிலதடவைகளில் மீசையைப் பிடித்து இழுத்தனர். கொலை செய்வோம் என்றும் உடலை துண்டு துண்டாக பிய்துவிடுவதாகவும் பயமுறுத்தினர்கள்'' என்று குட்டிமணி தனது சாட்சியத்தில் கூறினர்.

சாட்சியத்தை சிரேஷ்ட சட்டத்தரணி திரு எம். சிவசிதம்பரம் நெறிப்படுத்தினர். (ப)

## மரண அறிவித்தல்

### சின்னப்பு கதிரேசு

(முன்னைநாள் கிராம விதானையார்)

முன்னைநாள் மயிலிட்டி கிராம விதானையார் சின்னப்பு கதிரேசு அகால மரணமானர். இவர் மயிலிட்டியை சேர்ந்தவரும், தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், தவமணிதேவி (ஆசிரியை, பலாலி சித்தி விநாயகர் வித்தியாசாலை)யின் அன்புத் தகப்பனரும், ச, அருணசலம் (யபர்ஜி பிறதர்ஸ்) அவர்களின் அன்பு மாமனரும், கோபாலராஜன், ராஜ்குமார் ஆகியோரின் அன்பு பாட்டனரும் ஆவர். அன்னரின் ஈமைக்கிரிகைகள் புதன்கிழமை (இன்று) காலை மயிலிட்டியில் அவரது இல்லத்தில் நடைபெறும். உற்ருர், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

'தேவி வாசம்,'
மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை.

3002

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஆம் ஏப்ரல் மீ 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81.
Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.